ராணி
காமிக்ஸ்
ஜேம்ஸ் பாண்டு 007
அதிரடியில்
வில்லேந்திய
வீராங்கனை
குணா கரூர்
ரூ.5

ஆசிரியர்

அன்பின் வடிவாய்த் திகழ்ந்திடுவார்!
அறிவுக் கண்ணைத் திறந்திடுவார்!
பண்பின் உருவாய்ப் பொலிந்திடுவார்!
பணிவு கொள்ளப் புகன்றிடுவார்!

சின்னத் தவறு புரிபவரைச்
சினமே இன்றிப் பொறுத்திடுவார்!
கன்னல் சுவையில் கதை பலவும்
கனிவாய்ச் சொல்லித் திருத்திடுவார்!

எண்ணில் அடங்காச் சிறுவர்களை
ஏணிப் படியாய் உயர்த்திடுவார்!
மண்ணில் மலைமேல் சுடர்விளக்காய்
மாணப் பெரிதாய் உயர்ந்திடுவார்!

—தளவை இளங்குமரன்.

ராணி காமிக்ஸ் – 458
(மாதம் இருமுறை இதழ்)

ஜூலை 16, 2003.

குணா கரூர்

வில்லேந்திய வீராங்கனை



ஜேம்ஸ் பாண்டு

ஜூடி — வைத்த குறி தப்பாது

ஜூடியின் தந்தை கேவ்லாக்

கொலைகாரன் ஆமர்செல்டு

ஜமைக்கா தீவில் பிரமாண்டமான ஒரு பண்ணை. 20 ஆயிரம் ஏக்கர் பரப்புக்கொண்டது. கேவ்லாக் குடும்பத்தின் பரம்பரைச் சொத்து.
ஒரு நாள் கேவ்லாக்கும், அவர் மனைவியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.
பண்ணை நன்றாகத்தான் விளைகிறது. ஆனாலும், நமக்கு ஒரு கஷ்டம் வரும் போலத் தோன்றுகிறது!
என்ன கஷ்டம்?
கியூபாவிலிருந்து சில பண மூட்டைகள் இங்கே வந்திருக்கிறார்கள்!

நல்லதுதானே! இங்கே இருப்பவர்களுக்கு நல்ல விலை கிடைக்கும்!
கியூபாவில் புரட்சி ஏற்படுமோ என்று பயந்துதான் பண மூட்டைகள் இங்கே வருகிறார்கள்! அத்தனையும் கள்ளப் பணம்!!
கள்ளப் பணம் என்பதால் என்ன விலை கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள்!
பக்கத்துப் பண்ணையை நூறு மில்லியன் டாலருக்கு விற்றிருக்கிறார்கள்!
நூறு மில்லியன் டாலர்!

அம்மா! அய்யாவைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க...
கேவ்லாக் வெளியே வந்தார்.
மேஜர் கோன்சல்— கியூபாவிலிருந்து வந்திருக்கிறேன்!
ஒரு முக்கிய விஷயமாக உங்களைப் பார்க்க வந்தேன். இவர்கள் என் உதவியாளர்கள்.
என்ன விஷயமாக என்னைப் பார்க்க வந்தீர்கள்?



கியூபாவில் மிகப்பெரிய புள்ளியான ஆமர்சீல்டு உங்களைப் பார்த்து வரச்சொன்னார்.
ஜமைக்காவில் உங்கள் பண்ணைதான் மிகப் பெரிது என்றார்கள். அதை என்ன விலைக்குக் கொடுப்பீர்கள்?
முட்டாள்தனமாகப் பேசாதீர்கள்! என் பண்ணையை நான் விற்பதாகவேயில்லை!
கோபப்படாதீர்கள்! நீங்கள் என்ன விலை கேட்டாலும் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்!

அதுதான் சொல்லிவிட்டேனே— என் பண்ணையை விற்பதாக இல்லை! வேறு பண்ணை பாருங்கள்!
ஆமாசீல்டு ஜமைக்காவில் குடியேற விரும்புகிறார். அதற்கு உங்கள் பண்ணையைத்தான் விரும்புகிறார்!
இது எங்கள் பரம்பரைச் சொத்து. நான் விற்பதாக இல்லை. போய் வாருங்கள்!
பேரம் பேசி— ஏமாற்றுகிறவர்கள் அல்ல, நாங்கள். பணம் தயாராக இருக்கிறது!

பாருங்கள், அத்தனையும் ஆயிரம் டாலர் கட்டுகள்!
பணத்தைக் காட்டி என்னை ஏமாற்ற முடியாது!
என் பரம்பரைச் சொத்தை என் காலத்தில் அழிக்கமாட்டேன்!
இவ்வளவு பணத்தை அலட்சியம் செய்யாதீர்கள்!
மரியாதையாகப் போகிறீர்களா? போலீசைக் கூப்பிடட்டுமா?
நீங்கள் நேர்வழிக்கு வராவிட்டால், நாங்கள் குறுக்கு வழியில் போகவேண்டியிருக்கும்!

என்ன மிரட்டுகிறீர்கள்?
உங்கள் வாழ்நாளில் இந்த சொத்தை விற்கமாட்டீர்கள், அப்படித்தானே?
ஆமாம், அப்படித்தான்!
பரவாயில்லை. உங்கள் ஒரே மகளுடன் பேசிக்கொள்ளுகிறோம்!
என் காலம் முடிந்தபிறகு அல்லவா என் மகள்!
உங்கள் காலத்தை முடித்துவிடுவோம்!

மேஜரின் உதவியாளர்கள் துப்பாக்கியை எடுத்தார்கள்!
அன்பே...
ஆ....
இருவரும் காலி!
திருடிவந்த காரில் மூவரும் துறைமுகத்துக்குப் போனார்கள்!
இனி கேவ்லாக்கின் மகளைக் கண்டுபிடிக்க வேண்டும்!

அவர்கள் வந்த கப்பல் துறைமுகத்தில் நின்றது!
தலைவருக்குத் தகவல் கொடுக்க வேண்டும்!
லண்டன் இரகசியப் போலீஸ் தலைமை நிலையம்
ஜேம்ஸ்பாண்டை வரச்சொல்லுங்கள்!
மேலதிகாரியான 'எம்'மைப் பார்க்க ஜேம்ஸ்பாண்டு வந்தார்.
சார், அவசரமாக அழைத்தீர்களாமே?
கேவ்லாக் தம்பதிகள் கொலை செய்யப் பட்டது தெரியும் அல்லவா?
DOUBLE-DEATH
பத்திரிகைகளில் பார்த்தேன்!

AND WIFE FOUND SHOT
பாவம், வயதான தம்பதிகள்! ஒரு மகள் இருக்கிறாளாமே?
கொலைகாரர்கள் யார் என்பது தெரியவில்லை. ஜமைக்கா போலீசார் நமது உதவியை நாடுகிறார்கள்.
கேவ்லாக் தம்பதிகளை எனக்குத் தெரியும். 1925-ல் நடந்த அவர்களின் திருமணத்துக்கு நான் போயிருந்தேன். நல்ல மனிதர்கள்.
கொலைகாரர்கள் யார் என்று தெரியவில்லையா?
மாபியா கூட்டத் தலைவனான ஆமர்சில்டு என்பவனின் வேலையாக இருக்கும் என்று ஜமைக்கா போலீசார் சந்தேகப்படுகிறார்கள்!

இவன்தான் அவன். பழைய போர்க் கைதி.
மாபியா கூட்டத் தலைவன் ஆனதும் கோடி கோடியாக சம்பாதித்துவிட்டான்!
அவர்களின் நோக்கமே பணம் சம்பாதிப்பதுதானே!
கியூபாவில் காஸ்டிரோவின் புரட்சி வெற்றி பெறும் நிலையிலிருக்கிறது. எனவே, இந்தப் பெருச்சாளிகள் பண மூட்டைகளுடன் வெளியேறுகிறார்கள்.
எங்கே?
U.S.A.
Bahamas
Cuba
Atlantic Ocean
Dominica
Puerto Rico
Central
Jamaica
Haiti
கரீபியன் தீவுகளுக்கு. குறிப்பாக ஜமைக்காவுக்கு. அங்கே பணத்தைக் கொட்டி, பண்ணைகள் வாங்குகிறார்கள்!


பண்ணையை விற்க மறுத்ததால்தான் கேவ்லாக் தம்பதிகள் கொல்லப்பட்டதாக வேலைக்காரியின் வாக்கு மூலம்!
கொலைகாரன் கியூபாவில்தான் இருக்கிறானா?
இல்லை. அங்கேயிருந்து அமெரிக்காவுக்குப் போய்விட்டான். கனடா எல்லையில் வெர்மண்டு என்ற இடத்தில் இருப்பதாகத் தகவல்!
அவனது இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க, நமது ஆட்களை அனுப்பினேன். ஆனால், கண்டுபிடிக்கமுடியாமல் திரும்பிவிட்டார்கள். பிறகுதான் உங்களை அழைத்தேன்!
என் மீது இவ்வளவு நம்பிக்கை வைத்திருப்பதற்கு மிகவும் மகிழ்ச்சி, சார்.

ஆனால், அதைச் சட்டம் பார்த்துக்கொள்ளும்!
கேவ்லாக் தம்பதிகள் எப்படிக் கொல்லப்பட்டார்களோ, அப்படி இவர்களையும் கொல்ல வேண்டும்!
காட்டுமிராண்டிகளுக்குக் காட்டுமிராண்டி சட்டம்தான் சரி!
இந்தா ஜேம்ஸ், அந்தக் கொலை பற்றிய கோப்பு!
ஜேம்ஸ் தனது அறைக்குத் திரும்பினார்.
முதலில் வரைபடம் பார்க்க வேண்டும்!


வரைபடம் பார்த்தார்.
CANADA
U.S.A.
VERMONT
NEW YORK
CONN
உதவியாளரை அழைத்தா
ஜேம்ஸ்.
சுவீட்டி! நாளை
மறுநாள் நான் மாண்டிரீ
போக வேண்டும். ஒரு
டிக்கெட்டு பதிவு செய்யவு
இரண்டு நாளில் ஜேம்ஸ் கிளம்பினார்.
இந்த விமானம் வேகமாகப் போகாதே!
குடிப்பதற்கு ஏதாவது கிடைக்குமா?
கொண்டு
வருகிறேன்
சார்.

ஜேம்ஸ், மாண்டிரீலில் போய் இறங்கினார்.
முதலில் உள்ளூர் போலீசுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.
ஜேம்ஸ், விமான நிலையத்தில் ஒரு கார் எடுத்தார்.
ஒட்டாவா போக வேண்டும்!
ஆமர்சீல்டு பற்றி உள்ளூர் போலீசுக்கு நிறையத் தெரிந்திருக்கும்.
ஒட்டாவாவில் மவுண்டன் போலீஸ் தலைமை நிலையம், இது.
ஜேம்ஸ்பாண்டு அங்கு வந்தார்.
இங்கு நல்ல தகவல்கள் கிடைக்கும்.
ஜேம்ஸ்பாண்டு உள்ளே வாருங்கள்!

கர்னல் எதிர்பார்த்த ஜேம்ஸ்பாண்டு வந்திருக்கிறார்.
ஓ! உட்காருங்கள், ஜேம்ஸ்!
இப்போது கர்னல் வந்துவிடுவார்!
கர்னல் வந்தார்.
மிஸ்டர் ஜேம்ஸ், நான் கர்னல் ஜோன்ஸ். உங்களுக்கு வேண்டிய வசதி செய்து கொடுக்கும்படி எனக்கு ஆணை.
மிக்க மகிழ்ச்சி!
நான் மலைக்காட்டுப் பகுதிக்குப் போக வேண்டும்!

ஒரு வேட்டைக்காரனைப் போலப் போவது நல்லது!
அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்!
வேட்டைத் துப்பாக்கியுடன் வேறு துப்பாக்கியும் வைத்துக் கொள்ளலாம் அல்லவா?
மறைத்து வைத்துக்கொள்ளுங்கள்!
வேட்டையாட லைசென்ஸ் வேண்டும். ஏற்பாடு செய்கிறேன். திருட்டுத்தனமாகத்தான் எல்லை தாண்ட வேண்டும்!
எக்கோ ஏரிக்கரையில் ஆமர்சீல்டின் மாளிகை இருக்கிறது.

இந்த வரைபடம் பாருங்கள். கனடா எல்லையைத் தாண்டியதும் யு.எஸ்.ஏ எல்லையில் வெர்மெண்டு நகரம் இருக்கிறது. அங்குதான் எக்கோ ஏரி உள்ளது.
அமெரிக்காவில் உள்ள ஒருவனைப் பிடிக்க நாங்கள் உதவி செய்வது, அதிகாரப்பூர்வமாக அல்ல!
அமெரிக்காவே கொலைகாரனைப் பிடிக்க முடியும். ஆனால், இதற்கு 'ரெட் கார்டு' வேண்டும்!

எனக்கு எதுவும் தேவையில்லை! என் அடையாள அட்டை போதும்!
கொலைகாரனைப் பிடிக்கத்தானே போகிறீர்கள்? கொன்றாலும் பரவாயில்லை! பிடித்தாலும் தூக்கில்தானே போடுவார்கள்?
கனடா எல்லையைத் தாண்டி, அமெரிக்காவுக்குள் நுழைவது சிரமம்! கடத்தல்காரர்கள் பயன்படுத்தும் ஒரு பாதை இருக்கிறது. மலைப் பாதை. நடந்துதான் போக வேண்டும்.
West Berkshire
ஒரு அருவி எதிர்ப்படும். அது எனோஸ்பர்க் அருவி. அதன் நீர் ஓடி, எக்கோ ஏரியில் விழுகிறது.
அதன் கரை வழியே நான் போய்விடுகிறேன்!

இந்தாங்க, மூன்று லைசென்ஸ். ஒன்று, துப்பாக்கிக்கு, அடுத்தது, வேட்டையாட, மூன்றாவது கார் ஓட்ட. வழிபார்த்துக்கொள்ள வரைபடம். குறுக்கு வழியைக் காட்டக் கோடிட்டு இருக்கிறேன்!
ஆமர்சீல்டை தூரத்திலிருந்துதான் சுடவேண்டியிருக்கும். அதற்கு ஒரு துப்பாக்கி வேண்டுமே!
தருகிறேன்!
ஒரு 'ரைபிள்' கொடுத்தார்!
புதிய 99 எப். மாடல். 662 'ஸ்கோப்' கொண்டது!
ரொம்ப நன்றி.

25 ரவுண்டு சுடலாம். வேகம், மூவாயிரம் வரை.
கண் இமைக்கும் நேரத்தில் உங்கள் வேலை முடிந்துவிடும்!
வேறு ஏதாவது வேண்டுமா, ஜேம்ஸ்?
இல்லை. மிகவும் நன்றி. கிளம்புகிறேன்!
ஒரு எச்சரிக்கை ஜேம்ஸ்.
சொல்லுங்கள்!
ஆமர்சீல்டு ஆபத்தானவன்.

அருகே போகாதீர்கள். துப்பாக்கிக் குண்டை அனுப்பவேண்டிய இடத்துக்கு ஒரு ஆளை அனுப்பாதீர்கள் என்று சொல்லுவார்கள்.
என் வேலையை என் துப்பாக்கிக் குண்டுகள்தான் செய்யும்!
புலி வேட்டைக்குப் போய், முயல் கொண்டு வரக்கூடாது!
என்னைப் பற்றி இவருக்கு சரியாகத் தெரியாது போலிருக்கிறது!


“வேட்டை” க்கு ஜேம்ஸ் கிளம்பினார்!
ஒரு ஓட்டலில் நுழைந்தார்.
எல்லையில் உள்ள கடைசி ஓட்டல் இதுதான்.
ஒரு அறையில் தங்கினார்.
வேட்டைக்குப் போகிறேன். மூன்று நாளில் திரும்புவேன்!

ஜேம்ஸ் எல்லாவற்றையும் சரி பார்த்தார்
இதுதான் வேட்டைக்காரன் உடை!
தோட்டத்தில் வந்து நின்றார்
பச்சைப்பசேர் என்ற காட்டுக்கு இந்தக் காக்கி உடை நன்றாகத்தான் இருக்கிறது!
கொஞ்ச நேரம் படுக்க வேண்டும். பொழுது விடியுமுன் புறப்பட்டுவிட வேண்டும்!
ஜேம்ஸ் அதிகாலையில் எழுந்துவிட்டார்.

இந்த எண்ணெயை மேலே தேய்த்துக் கொண்டால் நல்ல சிவப்பாகிவிடுவேன்!
சிவப்பு இந்தியன் போல ஆகி விட்டார்!
வேட்டைக்காரன் போலத் தெரிவேன்!
ஜேம்ஸ் கிளம்பி விட்டார்!
ஏதாவது கண்கள் பார்க்கின்றனவா?
ஓட்டல் காவல்காரர் பார்த்தார்.
வேட்டைக்குப் போகிறீர்களா?
ஆமாம். வர இரண்டு நாள் ஆகும்.

பணம் கட்டி விட்டீர்களா?
ஆமாம்.
ஜேம்ஸ் காரில் ஏறிக்கொண்டார்
நேராகப் போனால், காட்டுக்குள் போகும் பாதை வரும்!
மிகவு நன்றி
கார் விரைந்தது.
குறுக்கு வழியைப் பிடிக்க வேண்டும்!
ஜேம்ஸ் ஊருக்கு வெளியே காரை நிறுத்தினார்.
இங்கே இருந்து நடந்து போவதுதான் நல்லது!
ஜேம்ஸ் காட்டுக்குள் வந்துவிட்டார்.
வரை படத்தைப் பார்த்துக் கொள்ளு வோம்.

படத்தை எடுத்துப் பார்த்தார்.
முப்பது நிமிடம் நடந்தால் ஏரிக்கரைக்குப் போய்விடலாம்!
கொஞ்ச தூரம் போனதும்
நாய் குரைக்கும் சத்தம் கேட்கிறதே? கவனமாக நடக்க வேண்டும்.
ஜேம்ஸ்/நத்தை வேகத்தில் நடந்தார்.
நாய் எங்கேயிருந்து குரைக்கிறது?
பண்ணை வீடு போலிருக்கிறது. நாய் கட்டிப்போடப் பட்டிருக்கிறது. அதன் கண்ணில் படாமல் குறுக்கு வழியைப் பிடிக்க வேண்டும்!
ஜேம்ஸ் நடந்தார்.
இன்னும் மூன்று மைல் போனால், அமெரிக்க எல்லை வந்துவிடும்!

சூரிய ஒளி பரவியது.
அமெரிக்க எல்லைக்கு வந்துவிட்டேன்!
இது யு.எஸ். நெடுஞ்சாலை 108. அந்தப் பக்கம் போனால் அமெரிக்கா.
ஒரு மணி நேரம் நடந்தார்.
எக்கோ ஏரிக்கரைக்கு வந்துவிட்டேன். ஆமர்சீல்டு மாளிகையைக் கண்டுபிடிக்க வேண்டும்!

ஜேம்ஸ்பாண்டு ஓரிடத்தில் ஓய்வு எடுத்தார்.
இனி வரைபடம் தேவையில்லை. எரித்துவிடலாம்!
ஜேம்ஸ்பாண்டு எழுந்தார்.
ஆமர்சீல்டு ஆட்கள் விழிக்கும்முன், அருகே போய் பதுங்கிக்கொள்ளுவது நல்லது!
ஜேம்ஸ் நடந்தார்.
தன்னைத் தேடி எமன் வந்து கொண்டிருக்கிறான் என்று ஆமர்சீல்டு கனவுகூடக் கண்டிருக்க மாட்டான்!
ஜேம்ஸ் ஒரு மரத்தில் ஏறினார்.
இங்கே இருந்து பார்ப்பது பாதுகாப்பானது!

மலை, காடு, ஏரி எல்லாம் நன்கு தெரிந்தன!
மாளிகை எங்கே?
துப்பாக்கியில் பொருத்தப் பட்ட தொலை நோக்குக் கண்ணாடி வழியே பார்த்தார்!
காலையில் எழுந்ததும் ஆமர்சீல்டு என்ன செய்வான்? மாடியில் நடப்பான்.
இன்னும் மாளிகையில் நடமாட்டம் இல்லையே!
அல்லது ஏரியில் குளிப்பான்....

இரண்டு இடமும் என் குறியில் தெளிவாக இருக்கின்றன!
அங்கே ஆட்கள் எப்போதுதான் விழித்து எழுவார்கள்?
ஏரிப் பக்கம் என்ன சத்தம்?

ஏரியின் அலை ஓசை அதுவும் எனக்குப் பாதுகாப்புதான்!
புல்வெளியைத் தாண்டி மரங்களின் பின்னே பதுங்கிக் கொள்ளலாமே!
நல்ல காற்றடித்தால் செடி கொடி ஆடி நான் நடப்பதே தெரியாது!

மாளிகையில் புகை வருகிறதே? காப்பி தயாராகிறதோ!
எனக்கும் பசிக்கிறது. கொஞ்சம் குடிக்கலாமே
ஒரு ரொட்டித்துண்டு தின்று, பீர் குடித்தார்!
இது போதும்!


ஜேம்ஸ், பூனை போல நடந்தார்!
பறவைகள் பறப்பதைப் பார்த்து யாரும் சந்தேகப் படக்கூடாது!
ஐந்தே நிமிடத்தில் மாளிகைக்கு மிக அருகில் போய் விடலாம்!
என்ன, அது? ஆள் அல்ல! மிருகம் போலத் தெரிகிறது!

ஜேம்ஸ் ஒரு மரத்தடியில் பதுங்கினார்.
மிருகங்களின் நடமாட்டம் தொடங்கிவிட்டது. இது எனக்குப் பாதுகாப்புதான்!
ஆனால், மான்களின் நடமாட்டம், மாளிகையின் பார்வையை இந்தப் பக்கம் திருப்பி விடக்கூடாதே?
அப்போது ஒரு அம்பு ஜேம்ஸ்பாண்டை குறிபார்த்தது!

பலதும் யோசித்து நேரத்தைக் கடத்தக் கூடாது! நெருங்கிப் போய்விடவேண்டும்!
ஜேம்ஸ் பதுங்கிப் பதுங்கிச் சென்றார்.
நல்ல இடத்தில் பதுங்கிக்கொள்ள வேண்டும்!
ஒரு அம்பு தன்னை குறிவைத்திருப்பதை அறியாத ஜேம்ஸ்பாண்டு நடந்தார்.


ஏரியின் அழகைப் பார்க்க ஆமர்சீல்டு மாடிக்கு வருவானா?
இங்கே பதுங்கிக்கொண்டால், யார் கண்ணிலும் படமாட்டேன். குறி வைப்பதும் எளிது!
அப்போது அம்பு பாய்ந்து வந்தது!
நகராதே! பிணமாகி விடுவாய்...

ஒரு பெண் தோன்றினாள்.
துப்பாக்கியைக் கீழே போடு. இல்லாவிட்டால், என் அம்பு உன் நெஞ்சைப் பிளந்துவிடும்!
நீ யார்?
ஏ... பெண் ராபின்குட்! முதலில் உன் வில்—அம்பைக் கீழே போடு. எல்லாம் சொல்லுகிறேன்!
நீ யார்? இங்கே என்ன செய்கிறாய்? ஆமர்சீல்டு ஆளா நீ?
முதலில் நாம் இங்கே இருந்து, மறைவாகப் போய்விடுவோம்!

ஜேம்ஸ் பின்னே வந்து, ஆமர்சீல்டின் வீட்டைப் பார்த்தார்.
புகை நின்றுவிட்டது! காப்பி குடித்துவிட்டார் போலிருக்கிறது!
இந்தப் பெண்ணை வைத்துக்கொண்டு என் வேலையை எப்படி முடிப்பது?
வேட்டைக்கு வந்திருப்பாளோ? முதலில் இவளை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமே!

என் பெயர் ஜேம்ஸ்பாண்டு. பக்கத்தில் வா... உட்கார்.
மான் வேட்டைக்கு வந்தேன்!
ஓ! நீங்கள் வேட்டைக் காரனா?
இங்கே மான் கிடையாது. புல்வெளியில்தான் மான் மேய்கிறது. அங்கே போங்கள்!

நீயும் வேட்டைக்குத்தான் வந்தாயா? லைசென்ஸ் இருக்கிறதா!
லைசென்சைக் காட்டினாள்.
1961
JUDY HAVELOCK
ஜூடி கேவ்லாக்! ஓ...! கொலை செய்யப்பட்ட கேவ்லாக்கின் ஒரே மகள்!

நீயும் வேட்டைக்குத்தான் வந்திருக்கிறாய். ஆனால், மான் வேட்டைக்கு அல்ல! மனித வேட்டைக்கு!
ஆனால், இந்த வில்-அம்பு கொண்டு ஆமர்சீல்டைப் பழிவாங்க முடியுமா!
பழி வாங்கப் போகுமுன் இரு கல்லறைகளை தயார் செய் என்று சொல்லுவார்கள். அது உனக்குப் பொருந்தும்!
நீங்கள் யார்? நான் ஆமர்சீல்டை பழிவாங்க வந்திருப்பது எப்படி உங்களுக்குத் தெரியும்?
உன் பெற்றோர் கொலை செய்யப்பட்ட கதை முழுவதும் எனக்குத் தெரியும்!

நான் ஒரு லண்டன் இரகசிய போலீஸ். ஆமர்சீல்டின் அடுத்த குறி உன் மீதுதான் என்பது எங்கள் சந்தேகம். அதைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்!
ஆமர்சீல்டைக் கொன்றால்தான் அவனிடமிருந்து உன்னைக் காப்பாற்ற முடியும்!
ஆமர்சீல்டு என்னைக் கொலை செய்ய முயற்சிப்பது எனக்குத் தெரியும். என் நாயை நஞ்சு வைத்துக் கொன்றார்கள். என் குதிரையை சுட்டுவீழ்த்தினார்கள். எல்லாம் என்னை
துப்பறியும் ஏஜண்டுகள் வழியே ஆமர்சீல்டின் முகவரியைக் கண்டுபிடித்தேன். அவனைத் தீர்த்துக்கட்ட வந்தேன்.

என் பெற்றோரைக் கொன்றவனை நான்தான் பழிதீர்க்க வேண்டும். நீங்கள் விலகி நில்லுங்கள், ஜேம்ஸ்!
வில் - அம்பு கொண்டு ஆமர்சீல்டை எப்படிக் கொல்ல முடியும்? வேறு மூன்று கொலைகாரர்களும் அங்கே இருக்கிறார்கள்!
இருக்கட்டுமே! நான்தான் எல்லாரையும் பழி வாங்குவேன்!
விலகி நில்! இல்லாவிட்டால், முதல் அம்பு உனக்குத்தான்!

சரி. ஆமர்சீல்டை நீ தீர்த்துக்கட்டு. மற்றவர்களை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்!
ஆமர்சீல்டு மாளிகையில் என்ன நடக்கிறது என்று பார்!
பலே! அப்படி வாங்க, வழிக்கு!
ஆமர்சீல்டு இன்னும் வரவில்லை. மற்ற கொலைகாரர்கள் அங்கே நிற்கிறார்கள்!
ஆமர்சீல்டு இப்போதுதான் வந்து கொண்டிருக்கிறான்!
தொலை நோக்கியில் பார்க்கிறேன்!


ஆமர்சீல்டு உடற்பயிற்சி செய்கிறான்!
ஆமர்சீல்டுதான். நான் யாரையும் சுட்டுக்
கொல்லுவதில்லை. இப்போது வேறு வழியில்லை என்று துணிந்தேன். நீ வந்து கைகொடுத்தாய்.
ஜேம்ஸ் மீண்டும் ஜூடியுடன் பேசிப் பார்த்தார்.
அம்பு தவறினால் வம்புதான்! நாம் இருவரும் மாட்டிக் கொள்ளுவோம்!
என் குறி தவறாது! வில் வித்தைப் போட்டிகளில் பரிசு பெற்றவள் நான்!
ஏரிக்கரைக்குப் போவோம்!

ஜூடி ஏரிக்கரைக்குப் போனாள்.
முட்டாள் பெண்! என்ன நடக்கப்போகிறதோ?
மாளிகையில் என்ன நடக்கிறது என்று பார்ப்போம்!
மெய்க்காப்பாளர்கள் இல்லை. ஆமர்சீல்டு நீச்சல்குளத்துக்குப் போகக்கூடும். அதுதான் சரியான நேரம்!

எல்லோரும் வந்துவிட்டார்களே! அந்தப் பெண்ணைப் பார்த்துவிடக் கூடாதே?
இப்போது துப்பாக்கி சுடும் போட்டி நடத்தலாமா?
நடத்தலாம், பாஸ்!
கொலைகாரன் கோன்சால், அவன் உதவியாளர்கள் என் குறிக்குத் தப்பமாட்டார்கள்!
ஆமர்சீல்டு ஒரு பெண்ணை அழைத்தான்.
அந்த பாட்டிலை எடுத்துக்கொண்டு என் பின்னே வா!

துப்பாக்கி சுடும் போட்டி நடக்கப்போகிறது போலிருக்கிறது! அதுவும் நல்லதுதான்!
ஆமர்சீல்டு ஒரு பாட்டிலை தூக்கி எறிந்தான்!
ரெடி!
சுடு!
பாட்டில் சிதைந்தது!
டமார்...!

அந்தப் பெண் இன்னும் என்ன செய்கிறாள்?
போட்டி முடிந்தது. ஆமர்சீல்டு ஏரியில் குளிக்கப் போகிறார்!
எனக்கு நேரே நிற்கிறான். தூள்பரத்திவிடுவேன்! அந்த முட்டாள் பெண் கெடுத்துவிட்டாள்!
மூவரும் தனியே நிற்கிறார்கள்!

நாலு பேரையுமே இப்போது தீர்த்துக் கட்டிவிட முடியும்!
வில், அம்பு கொண்டு பழிவாங்க முடியும் என்று நினைக்கிறாளே, முட்டாள் பெண்!
எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் நின்றான், ஆமர்சீல்டு!
சரியான குறி! அந்த முட்டாள் பெண் இன்னும் என்ன செய்கிறாள்?

ஆ...! பொன்னான நேரம்! இவன் எல்லோரையும் இரத்த வெள்ளத்தில் மிதக்க வைத்தான்.
இவன் ஏரித் தண்ணீரில் மிதக்கப்போகிறான் அவள் குறி தவறினால், நான் முயற்சி செய்கிறேன்!
ஆமர்சீல்டு குதிக்கப்போன நேரத்தில் அம்பு பறந்து வந்தது!
சர்...ர்...

சரியாகப் பாய்ந்திருக்குமா?
இவர்கள் யாரும் பார்க்கவில்லை போலிருக்கிறதே!
கோன்சல் சந்தேகப்பட்டது போலத் தெரிகிறதே
நமது வேலையை முடிக்க வேண்டும்.


ஆமர்சீல்டு மேலே வரும்போதுதான் உண்மை தெரியும்!
ஜேம்ஸ் தொலைநோக்கி வழியே பார்த்துக்கொண்டே இருந்தார்!
அம்புடன் ஆமர்சீல்டு தண்ணீருக்கு மேலே வந்தான்!
அவள் வீராங்கனைதான்! அம்பு குறி தவறவில்லை!!
அங்கே ஒரு பெண்... சுடுங்கடா!

மெய்க்காவலர்கள் சரமாரியாகச் சுட்டார்கள்!
ஜேம்ஸ் குறி வைத்தார்!
டுமீல்...
டுமீல்...

டுமீல்...
கோன்சால் என்னைப் பார்த்துவிட்டான்!
இந்தப் பிணங்களைத் தாண்டித்தான் அவன் வரவேண்டும்!


கோன்சால்
துப்பாக்கியுடன்
ஓடிவந்தான்.
யார் அவன்?
உயிர் பிழைக்க
ஓடுகிறானா?
அவன் சாய்ந்து சாய்ந்து
ஓடுகிறானே!
குறி வைப்பது
கஷ்டம்!

ஜேம்சை நோக்கி
சுட்டுக்கொண்டே ஓடினான்!
அவனை விடக்கூடாது!
மாளிகைக்குள் போனால்
தப்பிவிடுவான்!
மடக்க வேண்டும்!
கோன்சால் ஒரு கோட்டை மீது ஏறினான்!
அவனும் என்னைத்
தீர்த்துக்கட்ட முயற்சிப்பான்!

ஜேம்ஸ் சுட்டார்!
என்னைத் தேடுகிறான்! எனக்கு இது ஏற்ற குறி!
டுமீல்...!
ஆ...!
கோன்சால் செத்து விழுந்தான்!


நாலு பேரும் தீர்ந்தார்கள். அந்தப் பெண் எங்கே?

ஜூடி ஏரிக்கரையில் இருந்தாள்.
ஜூடி! உன்னை என்னவோ என்று நினைத்தேன்! நீ வில்லேந்திய வீராங்கனைதான்!!

உன் பெற்றோரைக் கொன்றவனைப் பழிதீர்த்துவிட்டாய், ஜூடி!

உன் தோளில் இரத்தம் வருகிறதே?
ஒரு குண்டு பாய்ந்துவிட்டது! ஆனால், ஆபத்தில்லை!
என் வில்லின் வேகத்தைப் பார்த்தீர்களா?
என் துப்பாக்கி இல்லை என்றால், கொலைகாரர்கள் உன்னைப் பிடித்திருப்பார்கள்!
சரி, போவோமா?
எங்கே?

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு வெளியிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

அடுத்த காமிக்ஸ்

பழிக்குப் பழிவாங்கும்
பலே பாண்டியன் !

கொலைகாரன் பேட்டை

வண்ணப்
படக்கதை

ரூ. 6 ஆயிரம்
பரிசு பெற்ற
மாணவ – மாணவியர்
பட்டியல்

ஆகஸ்டு 1-ந்தேதி வெளிவருகிறது !

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளி தோறும்

சிறுவர் தங்கமலர்

- ★ அட்டையில் உங்கள் குழந்தையின்படம்
- ★ புராண படக்கதை
- ★ துப்பறியும் படக்கதை
- ★ குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
- ★ மாயாஜால சிறுவர் தொடர்கதை
- ★ சிறுகதைகள்
- ★ பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளி தோறும் வண்ண புத்தகம் இலவசம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்